ZEENILOGAN

முள்ளில் விலகித் தேசம்
முள் நெருப்பில் வீழ்ந்தாலும்
வரலாற்றுச் சக்கரங்கள்
வருவதில்லைப் பின்னோக்கி

[illegible] ; இலக்கிய [illegible] இதழ்.

01 02·87


2,50

P·BOX·101535,
4040,NEUSS·1,
W·GERMANY.

மக்களே தெய்வங்கள்
மலரும் புது உலகம்

புதிர் - 01

கதிர் - 02



விமர்சனங்கள்
உளசுத்தியோடு
வரவேற்கப்படுகின்றன

★

அவை, உயர்த்தும்
படிகள் என்பதில் அசை
யாத நம்பிக்கை உண்டு.

★

விமர்சனங்கள், விடய
தானங்கள்; விருக்கள்; விண்
ணப்பங்கள் யாவும் ....

★

மாதந்தோறும் 20ம் திகதிக்கு
முன்பாக அனுப்பிவைக்கவும்.

★ நன்றி -

- ஆசிரியர் -

1987 02 - 01.

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவியது

# ஆசிரியர் குறிப்பு

## சந்தித்தோம்.......
## விமர்சித்தார்கள்......
## எழுதினார்கள்.......

முன்னைய இதழில் இலக்கியத்தின் இலக்கு எவ்வாறு அமைய வேண்டும் என எழுதியிருந்தோம்.

எமது இலக்கியப் படையலை மக்கள் முன் வைத்தோம்.

அதன் பின்னர்.... மக்களைச் சந்திக்க நேர்ந்த போது......

இவர்களிடம் எங்கே இலக்கிய ஆர்வம் இருக்கப் போகிறது? மேற்கு மோகத்தில் ஊறி இருப்பவர்கள், அப்படி இருந்தாலும் சினிமாப் பாடலும், சினிமா இலக்கியமும் தான் இவர்களைக் கவரும் என்ற சிலரின் வார்த்தைகள் எமது மூளையில் எதிரொலித்தபடியே படிகளில் ஏறினோம்.

அங்கே!

ஏமாற்றம் நிறைந்திருந்தது. இலக்கிய முயற்சியா என அன்புடன் வரவேற்றார்கள்.

ஆவலாக இருக்கிறோம் என்றார்கள்.

உதவிகள் தேவையானால் சொல்லுங்கள் என்றார்கள்.

கல்விச் சேவையில் பணியாற்றும் பல ஆசிரியர்கள் முன் வந்தனர்.

மேலும் ஆர்வம்

பிறந்தது.

நூறுவீதமும் அப்படி அல்ல, அப்படி எதிர்பார்க்கவும் கூடியதல்லவெனினும் அந்த வகையினர் தொண்ணூறுக்கு அதிகமாகவே இருந்தனர்.

இந்தப் பிரதியுடன் உங்களின் சிந்தித்தவோடு கருத்துக்கள் எம்மை உருவாக்கின் இணைத்துவிட சந்தர்ப்பம் இருக்கமுடியாது. இப்போ அதை நீங்கள் வாசித்துப் பார்த்திருப்பீர்கள்.

அதன்படி...

உங்களுக்கு நாம் பயன்பட்டிருக்கிறோமா? நீங்கள் எதிர்பார்க்கப்பட்டிருக்கிறீர்களா என்பவைகளை அறிய விரும்புகிறோம்.

விமர்சித்தார்கள் :-

கொமிஸ் நகரில் (ஜேர்மனி) நைடா வெந்த

அறிமுகவிழாவில் கலந்துகொண்டு சிலர் தந்த நேரடி விமர்சன உரைகளிலும், பல்வேறு இடங்களிலிருந்து வந்த விமர்சனக் கடிதங்களிலும் உள்ள சாராம்சங்கள் மென்மேலும் ஊக்குவித்தன

இருந்தும் அவற்றில் காணப்பட்ட, தவறுகள் சுட்டிக்காட்டப்பட்ட பகுதிகளையே கூடிய கவனமெடுத்துத் திருத்திக் கொண்டோம்.

விமர்சகர்கள் இதே பணியை ஒவ்வொரு இதழிற்கும் செய்வீர்கள் என எதிர்பார்க்கிறோம்.

அதுவே 'அறுவை'யின் ஆதாரமாகும்.

எழுத்தர்கள் ;-

ஒன்றிரண்டு கட்டுரைகள், பல கவிதைகள், சில துணுக்குகள் என்பன வந்து சேர்ந்தன.

அன்றி...

சில இவ்விதழிற் சேர்க்கப்பட்டுமுள்ளன.

விடப்பட்ட அதிகமானவற்றுள் ஒரு பொதுத் தன்மை இழையோடியதை அவதானிக்க முடிந்தது.

எழுதுபவர்கள் ஏதோ பக்கங்களை விட அல்லது வாசகர்களை விட வேறுபாடானவர்கள் உயர்வானவர்கள் என்பதும், சாதாரண பிரச்சினைகளைத் தொடாமல் புலமையைக் காட்டும் போக்கும் நிறைந்திருந்தது.

எழுத்தாள அன்பர்களே! நண்பர்களே!

'பாரதி' என்ற மகா கவியின் வார்த்தைகளிற் சொன்னால்.

"வல்லமை தாராயோ. இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே"

பின்பற்றுங்கள், பயனுற எழுதுங்கள்,

எம் யாராலுமே அழியாத இலக்கியம் படைத்து விட முடியாது "இலக்கியம் காலத்தின் கண்ணாடி" எனவே இந்தக் காலத்தையும் இன்றுள்ள பிரச்சினையும் எழுதுங்கள்.

சங்க இலக்கியத்தில் காணும் காதலை இங்கே எழுதுவதைவிட வேறு பயனுள்ள பல விடயங்கள் உண்டு.

தாரத்துத் தாரகையைத் தாரமாக நினைக்கவைக்கும் பூர்ஜுவாக் கவிஞர்களை (6ம் பக்கம் பார்க்கவும்)

நாம்
உயரத்தில் பறக்கிறோம்
ஒரு புறம் மட்டும்
பார்த்துவிடக் கூடாது...
என்பதற்காக!
கூர்மையாகப் பார்க்கிறோம்,
மேலும் தெளிவாக.....
விளங்கிக் கொள்வதற்காக



எங்களது
உயரமும்...!
பார்வையும்...!
உதாரணங்களாகிவிட்டன!

எங்களது
அனுபவத்தில்...
மேலும்!
உயரப் பறப்பதற்காக...
எம் இறக்கைகள்!
ஆம்...
அவை
மேல் நோக்கி
நிமிர மாட்டனவா?

# மேற்கே பறக்கும் கழுகுகள்



— ஸீனிலோகன் —

என
எண்ணிய கிராமங்களினூடு....
ஆனி...
அவை
என்றும்
தரையை நோக்கியே
கவிழ்ந்திருந்தன...
எப்பொழுதும்....
தரையின் செழிப்புக்கே
அடிபணிந்தன....

ஆனாலும்
நாம் உயரத்தில் இருந்தோம்.
விண்மீன்கள்
தூரத்திலேயே தெரிந்தன
தொட்டுவிட......
எம்மால் முடியவில்லை.

இறைக்கோ....!
இருப்புக்கோ...!
தரைக்கே சொந்தமானவர்கள்
என்று
முடிவோடு....

அன்று எழுத்தாளர்கள் போல இன்றும் எழுதக் கூடாது.

வீரத்துத் தெருவில் தம் கைகளையே தனிய கைகளாக்கிக் கொண்டு வாழ்ந்து முடிக்கும் அந்தப் பிரகிருதிகளைப் பற்றிய இலக்கியம் படைப்போம். அவர்களுக்கே பயன் தருவோம்.

அந்த வகையில் இலக்கியம் படைப்பது இலகுவானதும் கூடத்தான். ஏன் எழுத்து வாசனையற்ற நாட்டுமக்களால் இயற்றப்பட்ட எத்தனை பாடல்கள் தத்துவப் பொக்கிஷமாக உள்ளன.

"ஊரான் ஊரான் தோட்டத்திலே, ஒருத்தன் தோட்டத்து வெள்ளரிக்காய், காசுக்கு இரண்டு விற்கச் சொல்லிக் காகிதம் போட்டானடி வெள்ளைக் காரன்."

இந்த வரிகள் 'கண்டி' பிரதேசத்தின் நாட்டார் பாடல்.

இப் பாடல் விளங்க வைக்கும் ஏகாதிபத்திய எதிர்ப்பு!

பல நூறு பக்கங்களுள்ள புத்தகங்களால் முடியவில்லை.

எனவே எழுதுவது ஒன்றும் பெரிய விடயமுமல்ல எழுத்தாளர்கள் உயர்ந்தவர்களுமல்ல.

மக்கள் மத்தியில் எடுத்த அநுபவங்களைத் தொகுத்து அடிமட்டத்து உணர்வுகளோடு இணைத்து அவைகளை இலக்கியங்களாக்கி மக்கள் முன் வைத்து விடுவோம் வாரீர்.

# அரசியல் -

## மாதனமுத்தாக்கள் -

(கட்டுரையாளரின் பெயர் கட்டுரை முடிவில் தரப்படும்)

எந்த துறையும் அரசியல் என்பதால் மட்டுமல்ல, எந்த ஒரு மனிதனும் அரசியலிலிருந்தும் மக்கள் மத்தியிலிருந்தும் விலகிப் போய்விட முடியாது

எனவே இந்திய நாட்டவனாக இருந்த போதும் நான் ஒரு சர்வதேசியவாதி என்னையும் ஈழத்தமிழர் பிரச்சினை தொடர்பான நடவடிக்கைகள் சேர்த்தன.

சுமார் 200, 300 கிலோ மீட்டர்கள் தொலைவைத் தாண்டிப் போய்க் கூட தமிழீழப் போராளிகளின் பாசறைகளைப் பார்த்தும் அவர்களோடு பேசியும், அவர்களது நடைமுறைகளை அவதானித்தும் உள்ளேன்.

அவர்களுக்கும் சூழவுள்ள பொதுமக்களுக்குமான அந்நியோன்னியங்கள்.....

போராளிகளின் உணவுமுறைக்கும் அவர்களின் வாழ்க்கை முறைக்குமான இடைவெளிகள் என்பனவும் என்னால் நன்கு அவதானிக்க முடிந்தது.

இங்கு நான் சந்தித்த அனேகர் சந்தித்துக் கொண்டே இருக்கின்ற இயக்க ஊழியர்கள், போராளிகள் மத்தியில், தன்னம்பிக்கை இன்மையே காணப்படுகின்றது.

விரக்தி அடைந்த நிலையில் தினமும் பலர் வெளியேறி வருகின்றனர்.

இவர்களிற் பலருடைய அரசியல் அறிவைப் பரீட்சித்துப் பார்த்த போது.....

ஏன், இவர்களிடம் சரியான சமூக அணுகுமுறைகளே அனுபவமாவது காணாதபோது வெகுவாக வேதனைப்பட்டேன்.

இவர்கள் கைகளில் ஆயுதங்கள் கொடுக்கப்பட்டிருந்தன என அறிந்த போது இன்று நடந்து முடிந்த அசம்பாவிதங்கள் நிகழக் கூடியவை தான் என்பதையும் ஏற்றுக்கொள்கிறேன்.

வெளிநாடுகளில் வாழும் உங்களால் நம்பமுடியுமோ தெரியவில்லை. உளரீதியாக சிலர் பாதிப்படைந்து மனநோய் விடுதிகளிலும், தனித்த மனவிடுதிகளிலும் கூட உள்ளனர்.

இது ஊழியர்களினது அல்லது போராளிகளினது தவறா?

அல்லது இவர்களை வழிநடத்திய தலைவர்களினது தவறா?

இந்திய அரசிடம் தஞ்சம் என்று அர்ப்பணித்துவிட்டிருக்கும் இவர்களுக்கு இந்திய அரசு செய்து தந்த சூழ்ச்சியா?

இன்று எம்மத்தியில் இயக்கங்கள் வாழ்ந்து கொண்டிருந்த போதும் எமது இந்தியப் பிரசைகளை நம்புவதற்கு மாறாக இந்திய அரசின் மேல் நம்பிக்கை வைத்துள்ளனர்.

ஒன்றிரண்டு தவிர ஏனையவை இந்த நடைமுறையால் ஒவ்வொரு பிரதேசத்திலும் செல்வாக்கிழந்து வருகின்றன.

இவைகளுக்கெல்லாம் காரணம் தேடிய போது அது இந்தியாவில் மட்டுமே தேடவிட முடியாததாக எனக்குப் படவே நான் ஒரு சுற்றுப்பயணம் மேற்கொண்டேன்.

முதன் முதலில் 'கொழும்பு' சென்றேன். 'பெனடிக்ற்' என்ற நண்பரோடு நாட்டின் பல பாகங்களையும் தரிசிக்கும் வாய்ப்பினைப் பெற்றுக் கொண்டதுடன் சிலவைகளையும் அறிந்து வந்தேன்.

இலங்கையில் நான் பெற்றுக் கொண்டதான பொது முடிவுகள் இவை தான்.

1. மக்களுக்கும் போராளிகளுக்கும் நெருக்கமான உறவில்லை.
2. மக்கள் போராளிகளைக் கண்டு இன்று அஞ்சுகிறார்கள் இன்னும் சில நாட்களில் எதிர்ப்பார்கள் அல்லது காட்டிக் கொடுப்பார்கள்.
3. இராணுவத்தினரை அல்லது ராணுவ வாகனங்கள் உடைமைகளைச் சேதம் செய்து தாக்குவது மட்டும் போராட்டம் என நம்பி இருந்த கருத்து மக்களுக்குப் பொய் எனப்பட்டு

விட்டதோடு போராளி
களுக்கும் அசுத்த நம்
பிக்கை இழந்துவிட்டது.

4. போராட்டம்
'கண்ணிவெடி' என்ற
செயற்பாட்டுக்கு அப்
பால் நகரமுடியாமற்
சிக்கித் தவிக்கின்றது
இது இராணுவ செயற்
பாடுகள், அரசியல்-
தந்திரோபாய வறுமை
என்பவைகளை இயக்கங்
கள் கொண்டிருப்பதைக்
காட்டுகின்றது.

5. இதே வேளை இய
க்கங்கள் தம்மிடையே
மோதிக் கொள்வது
போன்ற நிகழ்வுகளையும்
போராளிகளின் தீவிரம்
குறைந்து விரக்தியடை
ந்துவிட்ட நிலைகளையும்
கிளப்பிக் கொண்டு எதிரி
பலம் இழந்து இருக்கும்
பொழுது உக்கிரமான
தாக்குதல் தொடுக்க
வேண்டுமென அரசு
தீர்மானித்துள்ளதும்
தெரியவருகின்றது.

- - - - - -

இவைகளைத் தெரி
ந்து கொண்டு இன்னெ
ன்று தெரிந்து கொள்ள
வேண்டி இருந்தது

மக்கள் மீது தங்
கி நிற்காத விடுதலை
இயக்கங்களிற்கு யார்
பணம் பங்களிப்பு செய்வது
பொருளாதார ரீதியாக
இயக்கங்கள் எங்கே
தங்கி நிற்கின்றன
எனப் பார்த்தேன்.

இந்தப் பணப்பங்
களிப்பு செய்பவர்கள்
யார்? என்ன உணர்
வோடு செய்கிறார்கள்
என்றும் அறிய ஆவ
லுற்றேன்.

மீண்டும் இந்தியா
சென்று எனது மகளின்
திருமணத்திற்கென சேர்த்து

வைத்திருந்த கொஞ்சப்
பணத்தின் உதவியால்
பிரான்சு, ஒல்லாந்து,
மே. ஜேர்மனி ஆகிய மூன்
று நாடுகளிலும் வாழ்
கின்ற தமிழ் மக்களில் சி
லரைச் சந்தித்தேன் அள
வளாவினேன்.

நான் இலங்கை
க்கோ வெளிநாடுகளுக்கோ
வந்தபோது சீதையைச் சிறை
மீட்பதற்கு வானரப்படை
யோடு வந்த ஸ்ரீ இராம
னைப்போ அல்லது ஏகாதி
பத்திய நோக்குடன்
வந்த இந்தியத் தமிழ் மன்
னன் எல்லாளனைப்போ
வரவில்லை.

ஏன் சார்! ஒரு
சிறிய கமக்காரன்
கூட என்னோடு வரவில்லை.

என்னுடைய சுற்று
லாப் பயணத்தைக் காட்டி
ஒரு பணம் பண்ணவும்
முடியாது. அப்படிப் பண்
ணினும் கூட அதை
எந்த இயக்கம் பண்ணு
வது எது எடுப்பது என்
பதும் பிரச்சினை ஏனெ
னில் நான் தமிழீழ
விடுதலை இயக்கம் எதை
யும் ஆதரிக்கும் முடி
வினை இதுவரை எடுக்க
வில்லை.

அவர்களின் நடை
முறையைப் பார்த்து
விரைவில் எடுப்பேன்.

மேற்கு நாடுகளின்
பயணத்தின் போது நான்
கோட்டல்களில் 'ரூம்'
போட்டுத் தங்கவில்லை.


இந்தியாவில்
சிலர் தந்த முகவரிக
ளில் தங்கினேன்.

ஆங்காங்கே மிக
உயர்வான உபசரணை
யோடு பல்வேறு சூழ்
நிலைகளிலும் சென்று எனது
நோக்கை நிறைவு செய்ய
வும் பேருதவி புரிந்தனர்.

(தொடரும்...)

யாழ் குடாநாட்டில் இன்று........

எரிபொருள் கட்டுப்பாடு



சிறுகதை :-

# வேண்டாத 'வேட்டுக்கள்'

— சாரணியன். —

"நாற்சாரப் பந்தலில
கலியாண மேடையில
மாமன் மகள் வீட்டு
மஞ்சத்துக்குப் போகாமல்,
என்ர ராசாவை....
இளவரசே
நீ போன இடமறியேன்.
ஐயோ... என் ராசாவே
நீ போய் புதைஞ்ச
காடறியேன்..."

குரலெடுத்துக் கத றிக் கொண்டிருந்தாள்.... அன்னம்.

கைகளைத் தோளிற் போட்டு அவளைக் கட்டிக் கொண்டு ஒப்பாரி வைப் பதற்கு ஒரு சிறு தெம்பல். ஓய்ந்து போன இந் தத் தெம்பல் தோள்களி லிருந்து நழுவி விழும், கைகளில் இருந்து விடுபட்ட "அன்னம்"

"என் ....ராசாவே!" என்று இழுவைத் தொனி யில் இழுத்தபடி....

மூக்கு நீரை முந் தானைத் தலைப்பால் ஒற்றி விடுகிறாள்.

மேலெழுந்து தணி யும் அவளுடைய மார்பு ஒரு வெப்பச் சூறாவளி ஒன்றை வீசிவிட்டுப் போகிறது........

ஸ்ரீமாச் பூர்துமணி நேரமாகக் கேட்டுக் கொண்டிருந்த இந்த அழுகைச் சத்தத்துடன் அயலவர் கூடிவிட்டனர்.

"மணியம்....

அட.. பாவி...

இப்பிடிப் போக எப்பிடியடா மனம் வந்துது?... ஒரு பிள்ளை ஒரு பிள்ளை என்டு உனட்டி வளர்த்தனடா .....ஒருத்தருக்கும் சொல்லாம....

ஐயோ, அடி என்ர ஆசைப் பிருப்பே உன்ன எப்பிடியடி தேத்துவன்?"

சித்ராமணிக் கிழவியின் ஒப்பாரிக்குச் செதுப்பிள்ளை ஆச்சியும் சேர்ந்து பாடுகிறு

ஐயோ! ஒரு நோயை நொடிய வந்து படுத்தியா? ஒரு வானைக், காரை அடிச்சுதா?.....

இப்பிடிக் கல்து மல் மாதிரி இருந்தியேடா!.... பாவியள் உன்னைத் தின்டிட்டாங்களோ!

அவங்க நல்லா இருப்பாங்களா? நாசமாப் போனவங்க குடும்பம் தான் உய்யுமா?



என்று திட்டித் தீர்
த்துக்கொண்டு......

ஓய்வுக்கு வந்தவ
ளான சேதுப்பிள்ளை
ஈரத் துவாலை
கண்ணையும் முகத்தையும்
துடைத்துக் கொண்டு....
கொண்டையிலிருந்த
'ஹேயர்' பின்னை
வாயில்
பிடித்த
படி



கைகள் தலையைக் கோதி
க்கொண்டிருக்க...

"அவர் சொல்லித்
தானே நடக்குதாம்"

மென்மையான
குரலில் அன்னத்தின் காதில்
சேதுப்பிள்ளை போடும்
அந்தச் சொற் கோவை
ஒரு புறம் சோகத்தை
யும் மதிக்கும் விருப்பு

"அது திண்டதோ
நானறியேன்...."

உரத்த தொனியில்
அன்னம் அலறியதும்....

அவளுக்கு ஒரு மாதிரி
ஆகிவிட்டது.

நாலாபுறமும்
பார்த்துவிட்டுப்
பேசாமலே இருந்து
விட்டாள்.

உக்கிரமான அழு
கை ஓய்வுக்கு வந்
தவுடன்....

"எல்லாம் இந்தப்
பாழாய் போன

பெண்டுகளை வாறது
அவளுக்குத் தான் என்ன
யோசினை.... அவனுடைய
இனம் என்ன கோத்திரம்
என்ன... உது நடக்காது
என்டு தெரிந்தும்...என்ன
யோசினையில இவளை
பாயிவிரிக்கிறதோ தெரிய
வில்ல"

இந்தத் தலையங்கத்
தில் ஒரு இடுவினர்.

"அவள் ஏனென
சொல்லப் போறாள்?
அவன் மாட்டனெண்டு
மறுத்துப் போட்டு எவ்
கெயாதும் கட்டுறவனே?"

இந்தத் தலைப்பில்
இன்னொரு இடு.....

"சாதி என்னடா
சாதி இந்தக் காலத்தில
இதுகளெல்லாம் பார்த்தா
மதிக்கவும் மாட்டாங்க
அதிருக்க.... அவனென்ன
இளக்கமே ... உவன்
ஐயன் அவங்கட.....
பகுதியெல்லேனோ அவ
னின்ர தேப்பன்."

இந்தத் தலைப்பில்
இன்னுமொரு இடு...

"தாயிட்ட அடு
து தகப்பனிட்டக்
காசு வாங்கிப் பள்ளிக்
கூடத்துக்கு மாதக்
காசு கட்டுறதே தவிர
அந்தக் காசு எப்பிடி
வந்தது, அப்பனின்ர
கஷ்ட - கஷ்டம் என்ன
என்டு எதுவுமே தெரி
யாமல் .... அப்பிடியே
பள்ளிக்கூடத்தில் இருந்
தாப்போல இயக்கங்க
ளுக்குப் போன பொடி
யள் .... உதுகள்.

இப்ப குடும்பப்
பிரச்சினைகள் தீர்க்கிற
தேவான்களா வெளிக்
கிட்டாங்கள்.....?

ஓமோம் நமக்
கென்னத்துக்கு இந்த
வம்பெல்லாம் ......

செல்வத்துரை வாத்
தியாரின் தொகுப்புரைக்
குப் பின்னே ஒரு வெள்
ளோ வோட்டிக் கிடு....
கிடுகுக் 'கேட்டின்'
களின் பின்னால் தம்மைத்
தெரியாமல் தாம் தெரிந்து
கொள்ள இருக்கும் பசுந்
தளிர்ப் பாவையர்கள்....
இந்தக் கொடிக
ளில் ஒன்றிரண்டு "ரஜனி"
யின் பள்ளித் தோழிகள்.
"பாவம்டி ...ரஜனி
யால இதைத் தாங்கவே
முடியாதடி..... இப்ப ....
ஊரில தெரியாத சனத்
துக்கும் தெரிந்து போச்சு
...... அவளின்ர வாழ்க்
கை ...இனி ..?"
இப்படிச் சமயய
துப் புலம்பல்கள் அவளுக்
காக வாடின.
திடீரென ஒரு
மயான அமைதி.......
மரண வீட்டில்
என்றுமே ஏற்படமுடி
யாத இந்தப் புதுமை...
எல்லோருடைய
பார்வையும் வழியை
விழுங்கி நின்றது.
பலரிடம் வியப்பு!
சிலரிடம் மட்
டும் வெறுப்பு!
யாரால் இது
ஏற்பட்டது என்று
இதுவரை தாங்கிக்
கொண்டிருந்தார்க
ளோ ... அதே "ரஜனி"!
ஆம்...
அவளே தான்!
வேலிக் கொடி
களின் தலைகளும் மேலே
வளர்ந்தன....
விசனக் காரரும்
உசார் நிலை அடைந்
தனர்.
சோகத்தால் சுரு
ண்டு போன உடல்!,
என்ன ஆகுமோ என
அஞ்சும் முகம்!, படி

ஏற ஏலாத கால்கள்,
படி மீது அணை......
இவைகளோடு....
ஒரு ரோஜா நாற்று
அனல் மீது நடக்கிறது.
நாம் ஆராய்ந்து
கொண்டிருந்த தனிய
சிக்கல்களை மறந்துவிட்
டதாக எண்ணிய
இருக்கள்....
மீண்டும் இசை
இசைத்தன.
ஆக்ரோசத்து
டன் சிந்தாமணிக் கிழ
வியாள் எழுந்தாள்!
கண்ட கண்ட
நாயை எல்லாம் ஆர
டி இழவு வீட்டுக்கு
வரச் சொன்னது?
எட்டி விளக்குமாத்
தை..... மலையான மலை
யை முந்தானைக்கை
பிடித் திண்டு போட்டு
.... இன்னும் மிச்சம்
இருக்கெண்டு வந்த
வளாக்கும், இடத்தக்
கிடத்தா மடத்தைப்
பிடிக்கிற கீழ்சாதியள்
தா.... வெக்கங் கெட்
டதுகள்....
"சிந்தாமணிக் கிழ
வியின் சீறல்....அன்னா
த்தைச் சீண்டுகிறது.
தலைமாட்டுப்
பெட்டியில் சாய்த்திரு
ந்த தன் தலையை "விருக்"
என உயர்த்தினாள்.
அவளுடைய உத
டுகளும் துடித்தன.
ஏதோ பேச
வாயெடுத்தாள்!
"ரஜனி" யின் ஈர
விழிகள்.... அவை செது
க்கும் அநாதரவான
பார்வை..... இதோ
என்னைத் தாங்கு என
முன்னே தள்ளிக் கொண்
டிருக்கும்.... வராத வா
ழ்வு..... அலங்காரம்
கலைந்து நின்ற அவள்.

கோலம் ........

அன்னம் பேச்சிழந்து மௌனமானாள்.

அவள் மௌனமானதென்ன.... ஊமை மௌனமானதா?

"என்னவோ செல்லச் சன்னதியானைச் சாட்சி வைத்த தாலி கட்டினவ .... சோறு இடுக்கவும், இழவு இடுக்கவும் வந்திட்டானாக்கும்! ....

துக்கம் காக்கிறனாம் துக்கம்.... இங்க ஒரு ஆம்பிளையளும் இல்லையே இந்தப் பலிக்காறியைப் பிடிச்சு வெளியில விட" என....

போர்க் கோழியின் சிலிர்ப்போடு சிந்தாமணிக் கிழவி......

ஓய்ந்து விட்ட அழுகையோடு ஒரு முடிவுக்கு வந்தவளாக எழுந்த "அன்னம்" கைகளின் நீ

> 1ம் நபர்:-
>
> அடேய்! என்ன இது? கண்ணை மூடிக்கொண்டு கண்ணடிக்கிறாயே...
>
> 2ம் நபர்:-
>
> தூக்கத்தில எப்பிடி இருப்பேன் என்று பார்த்தேன், மச்சான்.
>
> — தில்லைநாதன் —
>
> வைரவிலி

யைக் கோதிப் பின்புறமாக இழுத்து ஒரு சுற்றுச் சுற்றிச் செருகியபடி ...... முந்தானைத் தலைப்பைத் தேடினாள்.

அவளது கண்கள் ரஜனியைக் கூர்ந்து பார்த்தன.

பார்வையின் போர்க் கோலம் தொனித்தது..

......

ரஜனியைக் கூறு கூறாகக் கிழிக்கப் போகிறாள்.... இலவசமாக

ஒரு சினிமா பார்க்கும்
மகிழ்வை கிளையை அரவணை
த்துக் கொண்டு....
பரிமாறும் போ
தும் சூடான வார்த்
தைகளுக் கெ செவி
யைக் கூர்மை யாக்கிக்
கொண்டனர் எல்லோ
ரும்....

அன்னத்தின் வார்
த்தைகளுக்காக "ரஜனி"
மயக்கம் போட்டு விழு
ந்து விடுவாளோ என்
று கூட எதிர்பார்த்
தது ஒரு கூட்டம்.
"நீங்க எல்லாரும்
---- என் புள்ளயில
யும் என்னிலேயும் வச்
சிருந்த அன்புக்கும்
உறவுக்கும் ......
இப்ப என்ன சொல்ற
தெண்டே தெரியல...
இத்துக் கிழமா
திரி இருந்த என்ர
புள்ளைய இழுத்திட்

டுத் தனிமரமா நிக்கி
றது உங்களாலதான்
..... நீங்க ஒருத்
தியே என்ர கண்ணில
முளிக்காதையுங்க....
நீங்க தான் என்ர
பிள்ளையத் தின்டது
.... அவளில்ல ...."

- - - - - - -

அன்னம் வார்த்
தைகளை முடிக்கு முன்
னரே ... கிராமத்தின்
பெரியவர்....
"அன்னம் நீ
என்ன சொல்றதெண்டு
தெரிஞ்சுதான் சொல்
லுறியா? ..... உன்ர
மூளை குழம்பிக் கிளம்
பிப் போச்சுதா?"
வியப்பு நிறை
ந்திருந்தது அவர் முகத்தில்.
"அப்பிடி ஒண்டுமே
எனக்கு ஆசையில்ல....
நீங்க எல்லாம் துக்கம்
விசாரிக்க வந்தவங்க

அந்த மட்டோட நிற்குங்
க.... அந்தப் புள்ள வந்
தது பிடிக்காதவங்க...
வெளியில போயிடுங்க.
ஐயோ வெளி...
யில...."

- - - - - - - - - - -

"நாளைச் சொன்னேனென்டா
நாடு என்னைத் தாத்துமென்டு
கூட்டிப் போய் எங்காரும்
குடும்பம் நடத்தென்டு
சொல்ல நினைச்சிருந்தேன்
சொல்ல இல்ல பாவியடா!
என் ராசாவே....."
மார்பிலும் தொடை
களிலும் அடித்துக் கொண்ட
அன்னம்.
புதிய தோர் உலகி
ல் நுழைந்தவளாகத்...
தன் மருமகளையும்
அணைத்துக் கொண்டு.....

முன்னே இருந்த சனம்
கூட்டத்தை விழுந்துது

- - - - -

"கொலைகார உறவரும்
கொள்கை இல்லாப்
பொடியளுமாய்....
என் ராசாவைத் தின்
டியளோ!....
என்ர ஐயா!
நீ வாழ்க்கையில சேர்த்
தவள....
வாய் வயிறாய் விட்ட
தென்ன.....
நீ சாய்ந்த மண்ணில்
விழுந்ததுக்கு சம்மதமோ
சொல்லடா?

- - - - - - -

உறவர் யாருமே
போகவில்லை.
பெரியவரை மட்டும்
காணவில்லை.... .

"ராஜ சமயத் தலைவர்களை விட, பகுத்தறிவுள்ள
ஒரு நல்லாசிரியன் பயன் மிகுந்தவன்."
தொகுப்பு : வ. சிவராசா
நெஸ்போர்க். — தோமஸ் பெயின் —

# பெண்ணடிமை

## கருப்பின் கதை.......

- கருணா -

யாழ்; பல்கலைக் கழகம்.

பிறப்பு எனும் விபத்தினால் பெண்களாகி
இருப்பவரை மாடாக உழைத்து
சிறப்பெதும் காணாது வாழுகின்ற - அந்த
சிதைகளின் விடிவிற்கோ பாதை எது?

ஆசியப் பெண்கள் மட்டுமல்ல ஐரோப்பாவில் ஏன் உலகம் அடங்கிலும் வாழும் எல்லாப் பெண்களுமே 'கூலி இன்றி உழைக்கும் வீட்டுத் தலைவி' என்ற அமைப்பினை விட்டு வெளி வந்து விடவில்லை.

ஐரோப்பிய நாட்டின் [illegible] வாழ்வில், சில பெண்கள் மட்டும் கண்டுகொண்டு எம்மவர்களின் முடிவுகள் மாறுபட்டுத் தோன்றலாம். உண்மையாகவே அவர்களும் கூட சரியான விடுதலைக்குள் அமைந்து விடவில்லை.

1985 ல் 'நைரோபியில்' வெளியான அறிக்கை ஒன்றில்...

"உலக சனத் தொகையில் பாதிப் பங்கினர், ....

வேலைப் பளுவில் மூன்றில் இரண்டு பங்கும் .....

மொத்த வேதன

த்தில் (கூலி) பத்தில் ஒரு பங்கும்....

சொத்துரிமையில் நூறில் ஒரு பங்கும்... பெண்களுக்குள்ளது' என்கிறது.

கணவன், குழந்தை வீட்டுப் பணி என்பவற்றோடு வேலைக்கும் செல்லுகின்றதான நிலையில் கூடுதல் உழைப்பைச் செலுத்தியும் குறைவான அரசுக் கொடுப்பனவுகளோடு வாழும் குடும்பப் பெண்கள் ஐரோப்பாவிலேயே 35%க்கு அதிகமாகவுள்ளனர்.

பெண்கள் சார்பில் கவனம் திருப்பப்பட்ட ஒரு தச வருடங்களின் பெண்ணடிமைத் தனத்தில் சிறு முன்னேற்றம் என்று குறிப்பிட முடியவில்லை என்றாலும் பெண்களைச் சிந்திக்கத் தூண்டியிருக்கின்றது.

ஆங்காங்கே பெண்கள் மட்டுமல்ல சமுதாய விருத்தியில் அக்கறை கொண்ட ஆண்களும் கூட, ஸ்தாபனங்களும் கூட இதில் சிரத்தை கொள்ள வேண்டியவர்களே!

"உலகத்தின் பாதியை அடிமையாக வைத்துக் கொண்டு ஒரு சுதந்திர உலகை நினைப்பதென்பது முடியாத காரியம்'

இந்த அடிப்படையில் பெண்ணடிமைத் தனம் பற்றிய கட்டுரையில் அவ்வப்போது அடிமைத் தனத்தின் அங்கங்கள் சுருக்கமாக எளிய நடையில் கொடுக்கத் தீர்

மாண்டுத்தான் போனன்.

அதன்படி 'கற்பப் பிறந்த கதை' பிறந்தது.

பெண்ணடிமைத் தனத்தின் முதற்படியும் இதுவாக இருக்கலாம் என்பதால் இதனை விளங்கவைக்கிறேன்.

........

கிளைகளும், புதர்களும் மண்டிக் கிடக்கின்றன.

கரடிகளும், புலிகளும் உணவு தேடுகின்றன.

கடுமையான பனி ஒன்று.... ஆம் அடுக்கு நீடிய அந்த உடலில் உரோமங்கள் அடர்ந்திருந்த அந்த விலங்குகளும் இரை தேடிப் புறப்படுகின்றன.

பழங்களையும், கிழங்குகளையுமே நேற்று வரை புசித்த அவை இன்று மற்ற விலங்குகளின் உடலை உண்ணப் பழகிவிட்டன.

இரண்டாக மூன்றாக இருந்த விலங்குக் கூட்டங்கள் இப்போ நான்காகிப், பதினாறாகி, அறுபத்து நான்காகி.... எனப் பெருகி வருகின்றன.

எல்லாம் வளர்ந்துவிடவில்லை.

எத்தனையோ மற்ற விலங்குகளால் இரையாக்கப்பட்டுவிட்டன. சில இயற்கையாகவே இறந்துவிட்டன.

இருந்தபோதும் நாளடைவில் ஒரு பெருக்கம்.

நாலா புறமும்

உணவு இன்றி
போய்விட்டது
உணவு தேடிச்
சுற்று அப்பாலே அலைய
வேண்டிய அவசியம்
ஏற்பட்டது.
தங்கி வாழும்
குகைகளையோ புதர்க
ளையோ விட்டு ஓடிச்
சென்று உணவு தேடி
வரும் செயற்பாட்டுக்கு
பொருத்தமாக எந்தச்
சுமையுமின்றி இருந்த
விலங்குகளில் ஆண்வில
ங்குகளே அதிகம் இரு
ந்தன.
பருவம் வந்து
விட்டதையோ, பாலிய
லூக்கிக் கட்டுப்பாட்டை
யோ அறியாத அந்தக்
குழுக்களில்...
குழந்தைப் பரு
வம் தாண்டி விட்டால்
பெண் விலங்குகளின் வயி
றுகள் இயலாமையின்
பின்பு மட்டும் தான்
வாடி இருக்கும்.
எனவே....
இவர்களுக்கு
ஓடிச் செல்லும் மற்
றைய விலங்குகளைத்
துரத்திக் கொல்லும்
வாய்ப்புக் கிடைக்க
வில்லையே தவிர
இயலாதவர்கள்
என்பதல்ல...
ஓடிச் சென்று
காடு மாறிவிட்டால்
பாலூட்டும் பிள்ளை?
இப்படிப் பல
வேறு பிரச்சினைகளால்
ஆண் விலங்கு உணவு
தேடும் பணியில் ஈடு
பட்டது.
இம் முயற்சி
தான் மனிதன் முதன்
முதலில் உற்பத்தி
யில் ஈடுபடும் முயற்சி
யாகக் கருதப்பட்டது
மனிதவிலங்கு

உற்பத்தி உறவுக்குள் வந்துவிடுகின்றது.

'உற்பத்தி உறவை அடிப்படையாகக் கொண்டதே சமூக அமைப்பு'

இதுவரை எந்த வகையிலும் முக்கியப் படுத்தப் படாத, அறாவது தங்கியிருக்க வேண்டிய தேவையில்லாத அந்தக் குடிக்களில் ஆண்கள் மதிக்கப்படவில்லை.

பாலியல் உணர்வுகள் ஏற்படும் போது பெண்ணின் விருப்பமும், அவளுடைய தெரிவும் பிரதான அம்சமாக இருந்ததால்....

பெண் மேன்மையாகக் கருதப்பட்டாள். அவளுடைய ஆணையை ஆண்கள் நிறைவேற்றினர்.

அதையே நாம் 'தாய்வழி சமூக அமைப்பு' என்கிறோம்.

உற்பத்தி உறவின் இந்த மாற்றம் அல்லது தோற்றம் மெல்ல மெல்ல ஆணைப் பிரதானப் படுத்தத் தொடங்கியது.

உணவுத் தேவைக்காக ஆணின் கைகளை எதிர்பார்த்திருக்க நேர்ந்தது.

அத்தோடு வேட்டையாடிய போது உயிருடன் அகப்பட்ட இளைய சிறு விலங்குகளை வீட்டில் வளர்க்கவும் தலைப்பட்டான்.

அவைகளும் பெருகியபோது அவனிடம் சொத்து சேர்ந்தது....

இவைகளின் மூலம் ஆண் முதன்மை பெற

தாய்வழி சமூக அமைப்பின்
அழிவும் ஆரம்பமானது
அதுவரை...
'மனைவி'
என்ற பதமே
இருக்கவில்லை.
ஆண் சொத்துட
மையாளனாகிவிட்டான்.
அதிலும் தனிச்
சொத்துக் காரனாகிவிட்
டான்.
உரிமைக் கேற்ப
சொத்தின் அளவும் பெ
ருகியது
வாழ் காலத்தில்
அதை அனுபவித்து முடி
த்துவிட அவனால் முடிய
வில்லை.
கஸ்டப்பட்டுத்
தேடிய சொத்தை எப்
படியாவது அவன் விரும்பி
ய ஒருவனுக்குக் கொடு
ப்பதையே விரும்புவான்.
இந்த விருப்புக்
குரியவர் யார்?

தனக்கே சொந்
தமாகப் பெண்கள்...!
இது மாற்றுக்
குழுக்களில் இருந்து
கவர்ந்து வரப்பட்டோ
அல்லது ஒரே குழுவில்
மாற்று ஆண்களோடு
மோதலில் வெற்றி
பெற்றோ அடைந்த
தாகவும் இருக்கலாம்
இப்போ குடும்
பம் என்ற உறவுகள்
ஆரம்பமாகின்றன.
மனைவி..
குழந்தை..
தலைவன்...
என்ற பதங்கள்
ஆரம்பமான போதும்
குழுநிலையிலிருந்து
பிரிந்து செல்லக்கூடி
யதான சூழல் அமைய
வில்லை.
தனித்து வாழ
மனிதனால் முடியவில்லை
இந்த நிலையில்

சொத்துள்ள ஆண்
கள் தமது வாரிசு
களுக்கே அதை விட்டு
செல்லலாம் என சிந்
தித்தனர்.

வாரிசு என்பதை
யார் ஆக்கியவர்கள்.

இந்த இனம்
யாருடைய முயற்சியில்
வந்தது?

எதுவுமே தீர்மா
னிக்க முடியாமற் போ
யிவிட்டது.

ஒரே இருவரின்
புணர்ச்சி என்பதால்
முக ஜாடைகள் கூட
வேறுபாடு காட்டத்
தவறி இருக்கலாம்.

இந்தப் பிரச்ச
னைகளின் முடிவாக...

"எனது மனைவி
எனக்கு மட்டுமே
குழந்தை பெறவேண்
டும்!" என்ற கருத்து
ஆண்களின் பால் ஊன்
றத் தொடங்கியது.

பெண்களும் பொரு
ளுடைமைக் காரரின்
உடமைகளில் ஒன்றாக்
கப்பட்டனர்.

பாலியல் மன உண
ர்வுகளோடு தொடர்
பானது என்பதால்....

இதை அவர்களை
மனம் விரும்பி ஏற்று
க் கொள்ள வைக்கப்பட்டது.

தொடர்ந்து கலை-இலக்கியங்கள் தூபமிட்டன.
பூ விலங்கு என எண்ணித் தாமே
தமக்கு ஆடிக் கொண்ட.......
பத்தினிகள், இதற்காக உயிரை விடும்
உத்தமிகள் காரணத்தை அறிந்து விடு
ங்கள் என்று சொல்லவே இக்கதை....

# பவனியை மாற்றுவோம்.

– குகதாசன் –

மியபுஸ்

எடுத்தவனிருக்க அடுத்தவனைப் பிடித்து வைப்பார்
அடிப்பவன் இருக்க வாங்கியோன் விரோதியென
கெடுத்தவனை விட்டு அம்மை நோகும் கூட்டம்.
பாமரனை ஆடிப் பவனி வரும் காலமிது....

நல்லவரில் நல்லவராய் நானிலத்தில் நடிப்பவரும்
வல்லவரில் வல்லவராய் வாய்வீச்சால் வெல்பவரும்.
பல்லிளித்துப் பலமான பந்தம் பிடிப்பவரும்
பல்லாக்கிலேறிப் பவனி வரும் காலமிது.....

குறுக்கு வழியினிலே கூசாது செல்பவரும்,
நறுக்கிவிடும் நோக்குடனே நாசமது செய்பவரும்.
பொறுக்காமற் பொறுமைத் தீதன்னை மூட்டுவோரும்.
பாதி பசு பெற்றுப் பவனி வரும் காலமிது.

* * *

> "அரசியல் என்பது இரத்தம் சிந்தாத போர்
> போர் என்பது இரத்தம் சிந்தும் அரசியல்"
>
> – மா ஓ சேதுங் –

# வாழ்த்து நெஞ்சங்கள்... (வாசகர் கடிதம்)

"சஞ்சிகை தரமாகவும், காலத்துக்கேற்றதாகவும் அமைந்திருந்தது".

திரு. ரி. முருகையா
நெற்றெற்றவி - ௨.

"அறுவையின் திறமை தமிழினத்தின் மறுமலர்ச்சி"

திரு. ஆர். சிறீஸ்கந்தராசா
டுயிஸ்பேர்க் - 28.

"ஐரோப்பாவில் வந்த வெளியீடுகளில்.... உதைபந்தாட்டம், சமையற்கலை (சூப் வைத்தல்), நட்புறவுக் கழக செய்தி என இலக்கியம் படைத்தார்கள்..... அந்த எதிர்பார்ப்பில் "அறுவை"யையும் திறந்தேன்.... ஏமாந்தேன். எனவே "அறுவை"க்கு மனம் திறந்து ஒரு பாராட்டு."

ஒரு தோழன்...
நெற்நற்றவி - 1.

பொது எதிரிக்கு எதிராகப் போராடும் சமூகத்தை அமைக்க "அறுவை" பணிபுரிய வேண்டும்....

இதுவே எனது வேண்டுகோள்.

"ராதா" போட்டோஸ்டுடியோ.

எது எப்படியோ, வாசித்து முடித்துவிடவேண்டும் என்ற தன்மையைக் கொடுப்பதோடு.... பேசுவிட இடமுண்டு..... இப்படி அமைப்பு முதல் அனைத்தும் ஒரு விசேடமாகவே உள்ளது... மேலும் முன்னே செல்லலாம்..... வாழ்த்துக்கள்.

திரு. காரகேசன்.

லண்டன்.

அறுவையின் சேவை பல்லாயிரக் கணக்கான மக்களுக்குச் சேரவேண்டுமென வாழ்த்தி, என்றும் எனது பங்களிப்பும் உண்டு எனச் சொல்கிறேன்.

திரு. துளசிகாந்தன்.

'டோட்மெண்ட்.'

அறுவையின் இனியமுது அறுசுவைப் பசி அமுது .......

எஸ். ரி. விஜயகுமாரி.

டோட்மெண்ட்.

விடுதலை இல்லையெனில் ....
நீயோ ஒரு சிறை

- இங்கர்சால் -

தொகுப்பு:-
சியாமளா.

# கேள்வி? பதில்!

**- கீரன் -**

★ கீரனே தமிழக முதல்வர் எம்.ஜி.ஆரோடு கவுண்ட மணியை ஒப்பிடுமளவுக்கு உங்களுடைய அறிவு மட்டமா? பதில் சொல்லும்.

— "ராணி", டென்மார்க்.

● சார்... இன்னும் கிரமப்புற சார் அறிவு... மட்டமாகிருக்கு. சரி.... அது போக எம்.ஜி.ஆர் முதலமைச்சர், ஆனால் முதலமைச்சர் எல்லாம் எம்.ஜி.ஆர் அல்லவே? ஓ! கடந்த இதழின் பதிலைத் தப்பாக விளங்கிவிட்டீர்.

★ கீரன் சார்! நீங்க திருமணமாயிட்டவங்களா?

- கலைச்செல்வி. சி -
நோர்வே

● ஆகிக்கலாம் என்று பாக்கிறேன்... ஆனால் தாலியை நம்ம சம்சாரம் வைச்சுக் கொண்டு தர மாட்டேங்கிறா! ...

★ தன்மானம், சுய கௌரவம் தமிழனிடம் அதிகம் என்கிறார்களே! ஜேர்மனியைப் பொறுத்தவரை இது எந்த அளவு உண்மை?

- சிறீஸ்கந்தராசா -

• "டொச் மார்க்" (DM)ன் பெறுமதி இறக்கத்தில் கூடும் ஏற்றத்தில் குறையும்.

► நீரனே "துப்பாக்கி முனையிலிருந்துதான் அரசியல் அதிகாரம் பிறக்கிறது" என்கிறீர்களே..... அரசியல் தெரியுமா உங்களுக்கு?

ச. நகுலகுமார்

• அவிழ்சலாக்து.

• மக்களுக் கென்று ஒரு படை இல்லாவிட்டால் மக்களுக்கு அதிகாரமோ உரிமைகளோ இல்லை. இந்த அதிகாரத்தையும் உரிமைகளையும் பறிப்பவர்களும் படைகளை வைத்தே இருக்கின்றனர்..... எந்தப் பக்கம் அதிகாரம் பிறந்தாலும் அங்கே துப்பாக்கி முனைதான்.... ok! தம்பி கோபிக்க மாட்டீங்களே? நீங்க எந்தப் பக்கப் படையில சேருவீங்க?

★ நீரனே தமிழ்நாட்டுப் பிரமுகர்களின் வெளிநாட்டு விஜயம் பற்றி என்ன கூறுவீர்?

க. ஜெயக்குமார்
ஆர்ன்ஸ்பேர்க்.

• அவர்களிடம் காணப்படும் இந்தியத் தேசிய உணர்வு..! இந்தியாவின் அந்நியச் செலாவணியைக் கூட்டுவதற்காக உங்களைச் சந்திக்க வருகிறார்கள்.

★ தமிழீழம் கிடைக்குமா நீரரே?

எஸ். அரவிந்தன்.
பேர்லின்.

• சார், நீங்க கருவில இருக்கும் போதே அரவிந்தன் என்டு பெயரை வைச்சுக் கொண்டு, பிறப்பானா?.... இப்பிடிக் கேட்டிருந்தா முட்டாள்த்தனம் இல்லேயா? பிரச்சனை நிச்சயம் தீரும்! பெயர்?

எப்பிடி இருந்தாதானென்
ன? காகத்தைப்பித்தென்
றும் பித்துக்குக் காகம்
என்று சொன்னாலும் என்
ன ஆகிவிடும் தொடர்
ந்தால் அது பெயர். அவ்
வளவு தான்.

★ மேற்கு நாடுகளில்
வாழும் தமிழர்கள் தமது
உறவுகளுக்காக ஏங்கு
வதே இல்லையா?

அ. மரியதாஸ்
கிளிவன் புரோச்.

● இல்லாமலிருக்குமா?
பாதி கண்ணீரிலயும் பாதி
தண்ணீரிலயுமாகக் கரை
ந்து கரைந்து போயிடுது
வந்த புதிசில கிழமைக்
கொரு கடிதம், நாட்
கள் செல்லச் செல்ல ஆ
ண்டுக்கொரு கடிதம்....
ஆனாலும்.. பாசம் போகா
தையா!

★ மூவேந்தர்களும்
ஒற்றுமையா யிருந்திரு
ந்தா இந்தியா இன்னை
க்குத் தமிழன் கையில
இருக்குமே என்ன?

திரு. கலைச்செல்வன்.
ஸ்லெட்காட்.

● ஆசையைப் பாரு
.... ஆதிக்க வெறிக்கு
யாருதான் விதிவிலக்கு
மன்னர்களில தர்மமே
அதுவாச்சே..! அயல்
நாட்டுக்காக சிலவேளை....

## பரிசு .20

மாதா மாதம் திறமான ஒரு கேள்விக்குத் தரப்படும்.

► அடையாளமிட்டுப், பரிசுக்கான கேள்விகளாகும்.

## திரைச் சுருள்

- வீணி -

# திருமதி ஒரு வெகுமதி

நாளுக்கு நான்கு படம். நாளை எது புதிதோ இன்றுவரை இது.

அண்மையில் சில மாதங்களாக விசுவிடம் மொய்க்கும் சினிமா ரசிகர்களின் தொகை சற்று அதிகரித்துக் கொண்டு வந்ததென்னவோ உண்மைதான்.

காரணமோ, நீளமோ தொடர்ந்து காட்டப் படாமலும், தணிக்கைக் குழுவின் கத்தரிக் கோலுக்கு அதிகம் வேலைக் கொடுக்காமலும், சில நிமைகளை மட்டும் தொட்டுக் காட்டிவிட்டுச் செல்வதில் விசுவின் வல்லமை வெளிவருகிறது.

இருந்தும் இதில் சமுதாய ஆரோக்கியத் திற்கான பயன்பாடு எதுவும் இல்லை.

மாங்க.....

தாலி கட்டியவனைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம் மட்டும் ஆண்களிடம் இல்லை எனில் உலகத்தில் பெண்களே வாழ முடியாது போய்விடுமோ என்ற எண்ணம் வரவைக்கிறார்.

எஸ். வி. சேகரின்

கோடியான கோகிலா
வைக் கொத்து வதற்கென
விசு பாவித்த வார்த்
தைகளிலிருந்து ....
வீட்டு வேலை, தலை
வரின் பணி, தம்பிமார்
கடமைகள் முடித்து
ஏதோ இரண்டு "அவிரி"
என்று நிலையிலே வாயி
ல் போட்டுக்கொண்டு
ஓடி ஓடிப்போய் அலு
வலக "ரைப்ரைட்டரை"
இயக்கும்......

அந்த மனித இய
ந்திரமாகக் "கல்பனா"
காட்டப்பட்டபோது
.......

தமிழ் நாட்டுப்
பெண்களின் சுமையை
அடிமைத் தனத்தைக் காட்
டப் போகிறாரோ என
எண்ணிச் சற்று நிமிர்
ந்து உட்கார்ந்தோம்.
ஆனால்
"ஆவதும் பெண்ணால்
அழிவதும் பெண்ணால்"
என்ற கருவை அடிப்
படையாக வைத்துக்
கொண்டு.... வாசகர்
களின் தோய்த்த அம்
புக் கணைகளைப்
பெண்களின் தலையில்
சுமத்திவிட்டிருக்கிறார்.

பெண்ணடிமைத்
தனம் மேலும் வலியுறு
த்தப்படுகின்றது.

"கோகிலா" மீது
சுமத்தப்படும் பழி....
மத்திய தர வர்க்கத்தில்
தொழில் இன்றி ஆண்
களையே எதிர்பார்த்தி
ருக்கும் எந்தக் குடும்
பப் பெண்ணுக்கும்
இயல்பானது தான்.

அதற்குக் காரண
ணம் ஒரு பெண்ணின்
தனிப்பட்ட விருப்பு
வெறுப்புகள் மட்டு
மல்ல. அது அவர்சார்
ந்திருக்கும் சமூகத்தின்

பொருளாதார ரீதியாகத்தான்
அகதிகளே ஆகிறோம்.....
காரணம் நாட்
டுக்காட்டப்படவேயில்லை.
கலியாணத்திற்கு
சம்மதம் சொன்ன போது
"இங்கே ஆண்கள் யாருமே
முடிவெடுப்பதில்லையா?"
என்றொரு கேள்வி....
இது அவசியம் தானா?
யாரெடுத்தாலென்ன ...
அது ஒரு குடும்பமில்லையா?
வெளிநாட்டுச்
சுற்றுப் பயணத்தை முடித்
துக் கொண்டு எடுத்த
விழாவில் "ஜெயந்தி" யின்
பேச்சு, அதை மறுப்பது
போன்ற "விசு" வின் வின்
நியுரை..... அதில் கிளவா
ரிந்த ஆசியனைக் கண்டு
கழிக்க வெளிநாட்டார்
போவது பற்றிய அந்த
உணர்வுக் குரிய வாக்கி
யங்கள்..... ஒரு குண்டு
சித் தனியாவாவது, வெளி

நாட்டு மோகத்தை மறு
க்க உதவுமாயின்
அதுவே அந்தப்படத்தின்
வெற்றி.
கை நாட்டு மட்
டும் பாதிப்பானது தான்
.... என்றாலும் கருத்து
தெரிந்தாக வேண்டும் எடுக்கப்
பட்டதால் பாதிப்பு வலி
யுறுத்தப்பட்டது போலும்.
நீண்ட நாடக
ஙின் பின்பு பழைய பட்
டுகளின் வசனத் தொனி
யுடன் (டைட்டானிக்) கேட்
டது..... அங்கே. எம்.ஜி
ராஜம்... அளவாகப் பொ
றுப்பை முடித்துக்கொண்
டார்.
நடிப்பில் யாரும்
விசேடம் என்பதற்கில்லை
என்றாலும்...... மகளிர்க்கு
பண்ணவிட்டு "இடியோ"
கமெராவுடன் நிற்கும் தம்
தை.
விசுவின் வசனமாக

இருப்பதோடு கிஸ்மு, நிழல் கள்ரநிஜங்கியோரின் பேச்சுப் பாணியும் விதையைப் போல அமைந்துவிடாமல் எளியவர் ஞான்.... கவிஞனைச் சிரிக்கவைக்க மற்ற முயலும் கையாளும் உத்தி இவை ........

ஏதோ நாடகத் தன்மையைக் கொடுத்துவிடுவது போல உள்ளது.

வைரமுத்துவின் பாடல்கள் பொருத்தமானவை.....

அதுபோல கவிஞனுக்கு உயிர் கொடுக்கும் பின்னணிப் பாடகர்கள் அப்படியே.......

தயாரிப்புக்குரிய செலவின் விசேடம் படத்தில் இல்லை.

எழுத்தோட்டக் காட்சியில் காணும் சிறுவர்கள் பத்துவருடம் பிந்திய வளர்ச்சி கவிஞனின் மாற்றமின்மை செயற்கையாகவுள்ளது.

ஒரே வார்த்தையில் எனில் .......

"பழைய சித்தையில் பழைய ரசம்."

இருந்தும் அவ்வளவு புளித்துவிடவில்லை. சுமார் 50 புள்ளிகள்.!

> "நாம்...
> கண்டவற்றுள்
> 'மனிதன்' என்ற சொல்லைவிட...
> மேலானது எதுவுமே இல்லை.
> மனிதன் மட்டுமே உலகவரலாற்றை சிருஷ்டிக்கும் உந்து சக்தியாவான்."
> — மாக்ஸிம் கார்க்கி —

**தகவல்**

"அறுவை"யின்

# அஞ்சல்கல்வி

★. விளம்பரம் போதாமையால் எமது நேயர்களையும் அறிவித்தல் சென்றடையவில்லை என்று குறைச்சாட்டை வைத்து விண்ணப்ப முடிவு திகதியைப் பின்போடுமாறு கேட்டுக் கொண்டதால், **20-3-87** ற்குப் பின்போடப் பட்டுள்ளது.

★. விண்ணப்பப் படிவங்களுக்கென விண்ணப்பித்தோர்க்கு விண்ணப்பப்படிவங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

★. மேலும் விண்ணப்பப் படிவங்கள் தேவையானோர் விண்ணப்பிக்கவும்.

★. அஞ்சல் வகுப்புக்கள் ஏப்ரல் மாதத்தின் முதல் வாரத்திலிருந்து நடைமுறைக்கு வரும்.

★. விண்ணப்பித்த ஆசிரியர்களுக்கும் நன்றி, மேலும் கடிதமூலமே சந்திப்போம்.

1-2-87.

தொடர் கவிதை

# பொழியாது கலந்தவை

– மயூரன் –

"நீ இவ்வளவு வய
சான பிறகும்.... சிங்க...
....... முரட்டு தனம் வய
சாகியும் குறையவில்ல"
முன்னர் தினமும்
கேட்டு தன்னுள் தானே
ரசித்துக் கொண்ட அந்த
வார்த்தைகளைச் சில வரு
டங்களின் பின் கேட்
ட அந்தக் கழிப்பில்
கைகளை நெகிழவிடுகின்றேன்.
தன்னை விடுவித்துக்
கொண்டு வெளியே வந்த
தாயினுடைய அசைவுக
ளும் முகமாற்றங்களும்
"தேவி'யை மீட்டித்
திரும்புகின்றன.
அவளென்ன ஏதும்
அறியாத பெண்ணா?

இறைந்து கொண்
டிருக்கும் அவளது
இளமையின் உணர்வுகள்
அவளையறியாமலே துடி
த்த ஆரம்பிக்கின்றன.
பழைய நோட்டுகள்
படமாக்கப்படுகின்றன.
பசுமை நிறைந்த
அந்தப் பாடசாலையின்
சூழல்....
அவள் கண்ணுக்கு
தோன்றிய முதற் காட்சி
இன்றும் மனதை
வியாபித்து நிற்கிறது.
பாடசாலைக் கம்ப
த்தில் தாழாது பறந்து
கொண்டிருக்கும் அந்தத்
தேசியக் கொடி....
அதன் கீழ் கம்பீர

மாகக் காக்கியுடைய
டன் காட்சி தரும்
அந்த சாரணிய மாண
வன்...

தேசியகீதம் இசை
ப்பதற்காக அழைக்க
ப்பட்ட போது...

'தேவி' அவளா...!
எப்படி சொல்வதென்றே
தெரியவில்லை.

ஏற்றுக் கொண்
டாளா? விலகிக்
கொண்டாளா? என்று
தெரியாத உணர்வு.

அவனும் அவளும்
அங்கே மாணவர்கள்.

அதற்கு முன்ன
யும் அவளை அவன் சந்
தித்திருக்கிறான்.

இருந்த போதும்
அன்றுதான் அவளிடம்
ஒரு வேறுபட்ட
உணர்வு தோன்று
கின்றது.

பருவமடைந்து
வீட்டில் சில நாட்
கள் இருந்துவிட்டு
வந்த 'தேவி' தேசிய
கீதம் இசைப்பதற்காக
அழைக்கப்பட்ட அந்த
நாள்....

அவனிடம் புதி
தாக இந்த உணர்வு
ஏற்பட்ட அவ
னோடு அது நின்றுவிட
வில்லை.

உள்ளே கனன்று
எரிந்து கொண்டே இரு
ந்தது.

வளரும் அந்த
நினைவு அவன் வரும்
வழிகளிலெல்லாம்
அவள் பார்வையைப்
பதிய வைத்தது.

பாலே மொறு
மைப்படும் அளவுக்கு
வெண்மை, மடிப்புக்
கலையாத அந்தக்
கோல உடையில்
..... ஒப்பனை கலையாத

தனே, அவனுக்கே உரித்
தான கம்பீர நடை...
இவைகளோடு
வகுப்போரச் சாலையிலே
அவன் வருவதை...
அடங்கி வரும்
வகுப்புகளின் அரவம்
அறிவுறுத்தும்.
அந்த மாணவத்
தலைவன் 'ஸ்ரீமோகனி'டம்
மாணவர்கள் வைத்திருந்த
அன்பும் பக்தியும்!
அந்தக் கல்லூரி
அதிபருக்கே கிடைத்தி
ருக்குமோ என்பது கேள்
விக் குறிதான்..
"ஐடியல் ஸ்டுடென்ட்"

ஆசிரியர் :- மனிதன் குரங்கி
லிருந்து வந்தவன் என்
பதற்கு ஆதாரம்?

மாணவன் :- இப்போதும்
மரத்தில் ஏறிநின்று
பழம் எடுத்துப் பத்தி
ரிகையில் போடுவது.

**- பகீரதன் -**
ஏபஹுவசன்.

என ஆசிரியர்கள் வாழ்
த்துவதெல்லாம்....
அப்பொழுதுதான்
அவனுக்கும் இனிக்கத்
தொடங்கிறது.
துருத்தி நிற்கும்
பருவத்தின் ஆக்கிரோ
சம்...
அது நொருக்கும்

கொலின் பூபாலனின்

**25, 15, 10 DM கள்.**

3 பரிசில்கள்

நீங்கள் இதுவரை வாசித்த அல்லது இப்
போ வாசித்துக் கொண்டிருக்கின்ற முற்போக்கு
நாவல்களில் உங்களைக் கவர்ந்த உரைப் பகுதி
(70 சொற்களுக்கு மேற்படாமல்) எழுதி அனுப்பவும்.
முடிவுத் திகதி :- 20-04-1987

உள்ளுணர்வு...

இவை இரண்டொரு ஆண்டுகள் முன்னரே ஆரம்பித்திருக்கக் கூடாதா?

இப்படி அவள் எண்ணியதுண்டு.

இருந்தும் அந்த மூன்று மாதகாலத்தில் ஒரு நாள் கூட அவனோடு பேச எத்தனித்ததே இல்லை.

எப்படி எத்தனிப்பது....

எதைக் காரணமாக வைப்பது?

'நான் கிளாஸ் மொனிட்டர்' ஆக இருந்தாலாவது!

என்று கூட அவளுடைய சிந்தனைகள் ஓடியதுண்டு.

அமைதியும், அறிவும் தாண்டவமாடும் அவனது முகத்தில் அளவுக்கு அதிகமாகச் சிரிப்பை வடிய விடும் செங்கதிர்வனத்தைக் காண முடியாது.

எனவே யாரும் அவனோடு அளவாகவே பேசிக் கொள்வார்கள், பழகிக் கொள்வார்கள்.

அந்த ஆளுமைக்கு முன்னால் அவள் அஞ்சினாள்.

உண்மையின் ராகங்களாக உள்ளே அடங்கி வளர்ந்த அவளுடைய காதல்.

நெருக்கப்பட்ட சுருக்கம் விடுகொண்டிட முடிவது போல....

தன்னுடைய கொள்கைக்கு நடைமுறைப் பாதை தேடவேண்டும் என்ற எண்ணத்தின் உந்தலால்...

எப்படியாவது பேசுவதுதான் என்ற முடிவுக்கு வந்தவளாக இருந்தபோதுதான்....

அவளுக்கும் பங்க
ளூர் கழக அழைப்பு வந்
தது.....

ஓ... ஏனிந்தப் பட
டப்படிப்பும், 'யூனிவர்
சிட்டி'களும் என அவள்
மனம் சீறியது.

அழைப்பு வந்த
இரண்டாவது நாள்
வரையும் அவளது எதிர்
பார்ப்பு....

அவள் நினைக்கும்
சொல்லிவிட்டு செல்வதை

அவனுக்கோ இவ
ள் எந்த வகையில்?

அப்படியொரு
கருவூலமே இல்லை.

ஒரு சராசரி மாண
வர்களில் ஒருத்தி....

எனவே அவ்வே
யும் அவள் எண்ணங்கள்
வேகவில்லை....

வெப்பமாக்கப்ப
ட்டன.....

1983......

(அடுத்த இதழில் தொடரும்)

## கருத்து மோதல்

நடுவர் - குமரன்

தலைப்பு

பாரதியின் கவிதைகளில் விஞ்சி
நிற்பது...! தேசபக்தியா?
தெய்வபக்தியா?

நேயர்களே!

நீங்கள் ஆதரிக்கும் தரப்பில் நின்
று அதை நிறுவும் குறிப்புக்களை அறுவையின் மூன்று
பக்கங்களுக்கு மேற்படாமல் எழுதி அனுப்புங்கள்.

# வரலாற்றிலிருந்து வாழ்வுக்கு......

* மு. தில்லைநாதன் *

## ஜேர்மன் - ஜனநாயகக் குடியரசு

வடக்கில் "டென்மார்க்", மேற்கில் "ஒல்லாந்து", "பெல்ஜியம்", "லக்சம்பேர்க்", "பிரான்ஸ்" என்பனவும், தெற்கில் "சுவிற்சலாந்து", "ஆஸ்திரியா" என்பனவும், கிழக்கில் "செக்கோஸ்லவக்கியா" கிழக்கு ஜேர்மனி என்பனவும் எல்லைகளாகவுடையது.

கிழக்கு "பேர்லின்" இந்த நாட்டின் ஒரு பகுதியாகவே கொள்ளப்படுகின்றதாயினும் ஜேர்மன் ஜனநாயகக் குடியரசின் அரசியல் சட்டங்களிலிருந்து வேறுபட்டுள்ளது.

1985 ன் புள்ளி விபரப்படி 248603 ச.கி.மீட்டர் பரப்பளவைக் கொண்ட இந்த நாட்டின் மக்கள்தொகை 61049000 ஆகும்.

இதில் 43.8 லட்சம் வெளிநாட்டவர்கள் வாழ்கின்றனர் எனவும் காட்டப்பட்டுள்ளது. இதில் ...(இலட்)

| | | |
|---|---|---|
| துருக்கியர் | - | 14.5 |
| யூகோசெலவக்கியா | - | 5.9 |
| இத்தாலி | - | 5.3 |
| கிரேக்கர் | - | 2.8 |
| ஒஸ்ரேலியர் | - | 1.7 |
| ஸ்பானியர் | - | 1.5 |

நெதர்லாந்து = 1.1
போர்த்துக்கேயர் = .8
அரசியல் தஞ்சம் .8
(கோரும் விண்ணப்பதாரர்)
இவைகளில் அடங்காமலும்
சிறு தொகையினர்.

அரசியல் தஞ்சம் கோரியுள்ளோரின் தொகை 73832. இவர்களில் 60% மானோர் ஆசிய நாட்டவர்களே ஆவர்.

ஏனையவர்களில் 14% கிழக்கு ஐரோப்பிய நாட்டினையும் 11% மானோர் ஆபிரிக்க நாடுகளையும் சார்ந்தவர்களாவர்.

ஜேர்மன் ஜனநாயகக் குடியரசு பதினொரு மாகாணங்களைக் கொண்டது.

மிகச் சிறிய மாகாணம் "பிரேமன்" (BREMEN) இதன் பரப்பளவு 404 ச.கி.மீட்டர்.

மிகப் பெரிய மாகாணம் "பவேரியா" (BAYERN). இதன் பரப்பளவு ஏறத்தாழ 70551 ச.கி.மீட்டர் வரை ஆகும்.

மேலும்... ஏனைய விபரங்கள்.

ஜேர்மன் ஜனநாயகக் குடியரசின் அரசவைத் தலைவர். டா. ஹெல்மூட் கோல்.
(DR. HELMUT KOHL).

1982-10-04 ல் இருந்து தலைவராகக் கடமை ஆற்றி வந்த இவர்... 1987-01-25 ல் நடைபெற்ற தேர்தலில் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தலைநகர் :- (b)பொன் (BONN)

தமிழர்களின் சனத்தொகை = 292000.

மொழி :-

ஜேர்மன். (டொச்)

மிகச் சிறுபான்மையாகவுள்ள இப் பகுதியினர் "டெனிஸ்" எனும் மொழியைப் பேசுகின்றனர்.

மதம் :-

| | | |
|---|---|---|
| புரொட்டஸ்தாந்து வேதம் | = | 49% |
| றோமன் கத்தோலிக்கர் | = | 44.6% |
| இஸ்லாமியர் (16 லட்சம்) | = | 2% |
| யூத இனத்தவர் 32,000 | = | 0.4% |
| மத நம்பிக்கையற்றோர் | = | 3.9% |

1987 - 01 - 25 ல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலின் போது 496 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதில் மூன்று அரசியற்கட்சிகளைச் (CSU, CDU, FDP) சேர்ந்த 266 உறுப்பினர்கள் கூட்டாக அரசாங்கம் அமைக்கவுள்ளதாகவும் அறிகிறோம். அப்படி அமையுமானால் எதிர்க்கட்சியின் பலம் 230 ஆகும்....

இதைத் தொடர்ந்து அடுத்த இதழில் வெளியாகும் கட்டுரையில் ஜேர்மனியின் வரலாற்று நிகழ்வுகள் இடம் பெறும்.

(— வளரும் —)

# எங்களூர்ப் பெரியவர் -

வ. சிவராசா.
முஸ்பேர்க்.

காலையில் பூசை நிறு....
சாலையில் அவர் வருகை...
சால்வைகள் சரிந்து கிடக்கும்.
ஊர் நிலம் பூராவும்....
உறுதியோ அவர் பெயரில்.

மாலை மயங்குகையில்....
மனைவியரோ புத்திரியோ
கிடைக்காத உபதேசம்...
குடி மகனில் அவர் பெரிது.

அடிமை விலங் கொடிக்க...
ஆவேசப் பேச்சுகளாம்....
வீட்டுள் பல அடிமை
வீதியிலோ நல்ல பேர்.
தேர்தல் மேடைகள்...
தேனொழுகும் பேச்சுக்கள்.

இத்தனையும் நிறைந்த இவர்....
எங்களூர்ப் பெரியவர்.

நாம்........

# அரசியல் அகதிகளா?

# பொருளியல் அகதிகளா?

— கோவை —

— அரசு —

நாடுகளிற்கிடையே கடற்கொள்ளை அதிகரித்திருந்த ஒரு காலம்......

பிரித்தானியக் கப்பலும் யப்பானியக் கப்பலும் ஒன்றை ஒன்று சந்திக்கின்றன.

யப்பானிய மாலுமிகள் மிரட்டப்படுகின்றனர். ஏற்றி வந்த பொருட்கள், தங்கம் என்பவை கொள்ளையிடப்படுகின்றன.

வெறுங்கையோடு யப்பானிய கரையை அடைந்த மாலுமிகள் தமது அரசிடம் முறையிடுகின்றனர்.

அரசு பிரித்தானிய அரசுடன் தொடர்பு கொள்கிறது. மகாராணிக்கு விடயம் போடப்பட்டுவிட்டது. மகாராணியார் உடனே முடிவெடுத்துவிட்டார்.

மகாராணியின் முடிவின் பேரில் யப்பானிய அதிகாரிகளும் மாலுமிகளும் பிரித்தானியாவுக்கு அழைக்கப்படுகின்றனர்.

கொள்ளையிட்ட
கப்பலூழியர்கள் உட்பட
மாலுமிகள், பிரித்தானிய
அதிகாரிகள் எல்லோருமே
ஒரு மண்டபத்தில் கூட்ட
ப்பட்டனர்.

இரு தரப்பினரும்
ஒரே மண்டபத்திற் கல
ந்து கொண்ட விருந்தில்
மகாராணி அவர்கள்
தீர்ப்பு வழங்கி உரை
நிகழ்திய போது....

"கொலை செய்தோ
கொள்ளை அடித்தோ பிரி
த்தானிய நாட்டுக்குப்
பணம் தான் தேவை"

என்று கூறியது
மட்டுமல்லாமல் கொள்
ளைக் காரனை பிரித்தா
னியக் கப்பல் கப்ரனு
க்கு "சேர்" பட்டமும்
கொடுத்துக் கௌரவி
த்ததாக வரலாறு....

வலித்து போய்
நாடுகளைச் சுரண்டியதும்
கடலிற் கொள்ளையடித்
ததும், ஆசியக் கறுப்பின
மக்களையும், நாட்டவர்
களையும் சூறையாடியதும்
திருடியதும்.

காலத்துக்குக் கால
ம் வந்த ஏகாதிபத்திய
நாடுகள் செய்யாத தவறு
இல்லை.

இப்படிச் செய்த
நாடுகள் எல்லாமே
மேற்கு நாடுகள்தான்.

மேற்கு நாடுகள்
அன்று விரும்பியது பொ
ருளாதார சுரண்டல்தான்.

கிடைத்ததைச்
சுருட்டியவர்கள்....
இவர்கள்

அன்று இவர்களி
டம் பொருளாதார நோ
க்கம் இருந்தபோது
தவறில்லை...

நாம் மட்டும்
பொருளாதாரம் நோக்கி
வந்து எப்படித்தவறாகும்.

ஆசிய உற்பத்திகளை ஐரோப்பிய பொது சந்தையில் நிராகரிப்பது

பிற ஆசியாவுக்குமான ஏற்றுமதி வீதத்தைக் குறைவாகவே வைத்திருப்பது

இதோடு இன்றைய உலகில் நாடுகள் - இனங்களிடையேயான முரண்பாடுகள் காரணமாக அகதிகளாக மேற்கு நாடுகள் நோக்கி வந்திருப்பவர்கள் தமது உடலுழைப்பை மிகமிகக் குறைந்த வேதனத்திற்கு இவர்களிடம் விற்பது. இதிலும் ஆசியர்களே அதிகம்.

சராசரி எந்த மனிதனும் பணத்தைப் புறக்கணிப்பதில்லை. இதே வேளை அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் பிரஜைகளான நாமும் இதற்கு விலக்கல்ல.... பணம் சேர்க்கும் விருப்பு மோகமாய் பலருக்குறையுள்ள எமது நாட்டவர்களிடம் அதிகம் இருக்கலாம். அதற்காக அது தப்புமல்ல.

போதைத் வஸ்துக்களை விற்றல்

டெலிபோன் கொட்டகைகளில் பணம் விழாமல் பலது செய்தல்

இன்னோரன்ன நடவடிக்கைகளால் சம்பாதிக்க எண்ணமல் எமது உடலுழைப்பையோ, மூளை உழைப்பையோ செலுத்திப் பணம் சேர்க்க விரும்புவது ! எந்த வகையிலும். இதைத் தப்பெனக் கூறமுடியாது.

இன்று மேற்கில் வாழும் இலங்கையர்

அரசியல் அகதிகளா?
பொருளாதார அகதிகளா?
இது பெரும்பாலா
ன மேற்குலக அரசியல்
வாளில் அடிபடும் கார்
மேக வார்த்தை.
நம்மில் சிலர்கூட
நியாயமாக சிந்திப்ப
வர்கள்.....
"ஏன் நாம் உழை
ப்பை நோக்கமாகக்
கொண்டுதானே வந்த
வர்கள் எனவே அவர்
கள் பொருளாதார
அகதிகள் எனச் சொல்
வதில் அர்த்தமுண்டு!"
என நியாயம் காட்டு
வதுண்டு.
இது எப்படியோ
நாட்டு நிலைமையின்
கீழ், உத்தரவாதமற்ற
ஒரு சூழ்நிலையின் கீழ்
வந்தவர்கள். இன்று
அவர்களாலேயே மறுக்
கவோ, அனுப்பவோ
முடியாதபடி நிலைமை
யுள்ளதை அறிவார்கள்.
எனவே நாம்
அரசியல் அகதிகள் தான்
என்பதை அடித்துக் கூற
லாம்.....
அதேவேளை
அன்று எம்மிடம்
சுளை சுளையாக உறிஞ்சி
விட்ட நாடுகளிடம்
இன்றும் எம்மைப் பிழி
ந்து எடுக்கும் சிறு தொகை
ஒன்றும் இந்த நாடுகளு
க்குத் தேவையில்ல.....
ஆனால் அனுப்பும்
பணங்களை இந்திய வங்கி
களில் போடாதீர்.
எங்கிருந்தாலும் இலங்கைத் தேசியம்.

"மற்றவனுடைய பல்லை விட எங்கள்
முரசு விசேடமானது"...

— இல. பழமொழி —

## எழுதுங்கள்!

சோறும் கறியும் ...

# மண்வாசனை

இலங்கை எனும் சுவர்க்கத்திலுள்ள, எழில் கொஞ்சும் உங்கள் கிராமங்களைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் . . . . . . .

அதிகமான கட்டுரைகள் வரும் கிராமத்திற்கு முன்னுரிமை கொடுப்போம்.

கூடிய தகவல், சரியான தகவல்கள் உள்ளதாகக் காணும் கட்டுரை மட்டுமே பிரசுரிக்கப்படும்.

★ ★ ★ ★ ★ ★

இந்த அடிப்படையில் இம்மாதம் எம்மை வந்து சேர்ந்த ஏழு கட்டுரைகளில் ஐந்து கிராமங்கள் பற்றிய தகவல்கள் வந்தன. இரண்டு கட்டுரைகளைவிட அதிகமாக சாவகச் சேரியை அண்மித்திருக்கும் கிராமமான "மறவன்புலவு" பற்றி குறிப்பிடப்பட்டிருந்தது. எனவே எமது இம்மாத மண்ணின் மணம்.

— மறவன் புலவுக்கே —

# மறவன்புலவு

- [illegible] -

* * *

தங்க நகைப் பாரம் தாங்காது, மங்கையென
பொங்கிப் புதுப்பொலிவு பூத்த கதிர்க்குலைகள்.
அங்கே இருமருங்கும் ஆர்ப்பரித்து அழகுரைக்க.
வங்க மறவர் வாழ்கின்றதெம் புலவு....

நாவற்குழியிலிருந்து சங்குப்பிட்டியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் உங்களை 5 வது கிலோ மீட்டரில், நெல் விருந்துக் கதிர்கள் கையசைத்து வரவேற்கும்... நெய்தல் நிலப்பாங்கில் ஒரு மருதமண்.

ஆம். அதுவேதான் 'மறவன்புலவு'

வடக்கில் 'அரியாலை' தெற்கே 'கைதடி' கிழக்கில் 'நாவற்குழி' மேற்கில் சாவகச்சேரி என்பவற்றைத் தனது எல்லைகளாகவுடையது.

ஏறத்தாழ 12 சதுர கிலோமீட்டர் பரப்பையுடைய இக்கிராமத்தின் தன்மை மறவர் வாழ்வுக்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் இடமாக அமையலாம் என உறுதிசெய்கின்றது.

இன்றும் தூர்ந்து போன நிலையிலுள்ள ஆங்கிலேயரின் கற்கோட்டை... இதை மேலும் வலியுறுத்துகிறது.

சிற்றரசர்களும்
பிரபுக்களும் தமது வீரமற
வர்களுக்குப் பாசறை அமை
த்துக் கொடுப்பதற்காகத்
தேர்வு செய்து அமைத்துக்
கொடுத்த இடம் என்ப
தால்.....

'மறவன் புலவு' என்ற
பெயர் வழங்கலாயிற்று
என்பது வரலாறு.

எந்நேரமும் எதிரி
களைக் கண்காணிக்க
உகந்த தரை அமைப்
பும் சூழலும் உடையது
என்பதுடன்.....

சோராத ஆண்கள்,
சலியா நங்கையர், மாறாத
செல்வம், குன்றாத ஊற்று,
கொடுகாத பயிர்கள்,
குறையாத சுனைகள்.....

ஆம்!

நிறைவான அந்த
நிலப்பரப்பை நினைக்கும்
போதெல்லாம்....

ம்....

மழை நம்பிய
வேளாண்மை, மனம்
பூரிக்கும் விளைநிலங்கள்,
காராளர் தொகை கணி
சமாகவுள்ள அந்தக்
கிராமத்தில் அடுத்த
கார்காலம் வரும் வரை
எடுத்த விளைச்சலைச் சேமி
த்து வைத்து உண்பதும்,
அயலவரை உபசரிக்
கும் பண்பும் இயல்பான
தன்மைகளாக இணைந்து
விட்டன.

சேவைகளுக்கு
நெற் கூலி (பண்டமாற்று,
மானிய) கொடுக்கும்
முறை இன்னும் கைவிட
ப்படாமல் பின்பற்றப்
பட்டு வருகின்றது.

வானத்தை நம்பி
வேளாண்மை செய்வதற்கு
அடுத்தபடியாக, மானத்
தை மறைக்கும் புடவைக்
கைத் தறிகளில் உற்ப
த்தியிலீடுபடுகின்றனர்.

இப்படி வேறு சிறு
சிறு கைத்தொழில்கள்
இடைசைகளில் மேற்கொ
ள்ளப்படுவதுடன்.

தேனை, மீனை
அனைத்தும் பெற்றுக்கொ
ள்ளக் கூடிய ஒரு
தன்னிறைவுக் கிராமம்
என்றால் மிகையாகாது.

உள்ளூராட்சி மன்று,
பொலிஸ் நிலையம், அர
சாங்க அதிபர் பணிமனை,
போன்ற அனைத்து நிர்
வாகத் தொடர்புகளும்
சாவகச்சேரியுடனேயே
இணைக்கப்பட்டுள்ளன.

விருந்தினர்க்கு
உணவு, பக்தர்களுக்கு
ஆலயம், பாவலர்க்குக்
காட்சிகள், காவலர்க்கு
இயற்கை அரண்.....

இனக் கலவரத்
தின் பாதிப்புக்குள்ளான
320 அகதிகள் குடும்
பத்தினருக்குத் தங்கும்
இடவசதியும், அடை
க்கலமும் அளித்து
அன்போடு பேணிவரு
கின்றது.

ஏறத்தாழ நாலா
யிரம் (4,000) வரையான
குடித்தொகையைக்
கொண்ட இக்கிராம
த்தின் எதிர்காலம்
மேலும் வளர்வதற்கான
வாய்ப்புக்கள் அதிகம்
உண்டு.

மகாதேவா பாலம்,
பனம் பொருள் தொழிற்
சாலை என்பன இதனை உறு
தி செய்கின்றன.

- நன்றி -

நீங்களும்,
இலங்கை மீண்ட பின் எம்மிடம் வாருங்கள்.
என்றும் தடைகளைக் கடந்து கொள்
என்கின்ற, அந்த மண்ணின் மணத்தை நுகருங்கள்.

"கமெரு"க் கலைக்கு

**VIDEO THIRUPPATHY**

தொலைபேசி இல :-

02101-101748.

02106-62890.

**NEUSS-1.**

---

புத்தம் புதிய பிரதிகள் .....

அத்தனையும் அசல்கள் ....

# DAGINY

## VIDEO CENTER

தொலைபேசி:-

0201-629507

0201-238999

AMIX STR - 26.

4300, ESSEN.

உங்கள் மொழி மூலம்
அழைக்கிறது

# LANKA LINK

## லங்கா லிங்

T.P:
02101-275340

Zolltor passage-12,
Michel strasse,
4040-Neuss.

தமிழ்மணம் கமழும்
திருமணங்களா?
ருதுசாந்திகளா?

## தங்கநகை,

## மணவறை

**BOBY**

**NEUSS-1**

தொலைபேசி
02101-17846